## ஜே.ஏ.சி. கோரிக்கைகள்

## தமிழக அரசே! உயர்கல்வித் துறையே!

1. 01.01.2006-க்குப் பின்னர் பணியில் சேர்ந்த கல்லூரி ஆசிரியர்கள் அனைவருக்கும் யு.ஜி.சி விதிமுறைகள் 2000-த்தின் படி அவர்கள் பணி மேம்பாட்டிற்குத் தகுதியான நாள் முதல் முழுப் பணப்பயனுடன் கூடிய பணி மேம்பாடு வழங்கிடுக! CAS பெறுவதற்கான RC / OC நிபந்தனையை தளர்த்திடுக!
2. நாசகர புதிய ஓய்வூதியத் திட்டத்தை (Contributory Pension Scheme) இரத்து செய்வதோடு, பழைய உறுதிப்படுத்தப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை (Defined Benefit Scheme) மீண்டும் அமுல்படுத்து!
3. ஏழாவது யு.ஜி.சி. ஊதியக்குழு பரிந்துரைகள் தொடர்பாக ஜேஏசி-யை அழைத்துப் பேசி உடன் அமுல்படுத்துக!
4. உயர்கல்வித்துறையால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள - இளையோர் மூத்தோர் ஊதிய முரண்பாடு (கல்லூரியை ஒரு அலகாக கருதி) களைதல், 01.01.1996 முதல் பணி மேம்பாடு வழங்குவதோடு ஐந்து ஆண்டுகள் தேர்வு நிலை விரிவுரையாளராகப் பணியாற்றியோருக்கு ரூ.14940/- உயர்வூதியம் நிர்ணயித்திடுதல் - தொடர்பான கல்லூரிக் கல்வி இயக்குநரின் செயல்முறைக் கடிதங்களை உடனே செயல்படுத்துக!
5. அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை அறிவியல் கல்லூரிகளில் மூன்று ஆண்டுகள் இணைப்பேராசிரியராக பணியாற்றிய அனைவரையும் பேராசிரியராக பணி மேம்பாடு (CAS) வழங்குவதோடு அதற்குரிய ஊதியத்தினையும் வழங்கிடுக!
6. கல்லூரி ஆசிரியர்களின் பணி மேம்பாடு மற்றும் ஓய்வூதியப் பயன்களுக்கு அவர்களின் தகுதியுடைய முந்தைய பணிக் காலத்தை எடுத்துக் கொள்க!
7. 01.04.2003-க்குப் பிறகு பணியில் சேர்ந்த ஆசிரியர்களுக்கு மத்திய அரசு வழங்கியுள்ளது போல் பணிக்கொடை வழங்குக!
8. பேச்சு வார்த்தையில் ஏற்றுக் கொண்டபடி, 2013 பிப்ரவரி 20, 21 அகில இந்திய வேலை நிறுத்த நாட்களுக்கும், 2017 ஆகஸ்டு 22 வேலை நிறுத்த நாளுக்குமான ஊதியத்தை வழங்கிடு!
9. உயர்கல்வித்துறையில் நிர்வாகப் பணிகளில் உள்ள கல்லூரிக்கல்வி இயக்குநர், இணை இயக்குநர்கள் மற்றும் மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள் ஆகியோருக்கு ஓய்வுக்குப் பிந்தைய மறுபணிநியமனம் வழங்கக்கூடாது. தற்போது வழங்கப்பட்ட மறுபணிநியமன ஆணைகளை இரத்து செய்ய வேண்டும்.
10. அனைத்து பல்கலைக்கழகக் கல்லூரிகள், மாதிரி கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளை அரசுக் கல்லூரிகளாக மாற்றிடு!
11. அனைத்து பல்கலைக்கழகக் கல்லூரிகள், மாதிரி கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளில் பணியாற்றும் தொகுப்பூதிய ஆசிரியர்களின் குறைந்த பட்ச மாதச் சம்பளத்தை யுஜிசி விதியின்படி நிர்ணயித்திடுக! மறைந்த தமிழக முதல்வர் அம்மா அவர்கள் அறிவித்தபடி அரசு கல்லூரிகளில் பணிபுரியும் கௌரவ விரிவுரையாளர்களை நிரந்தரம் செய்திடுக!

12. அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளிலும் 31.05.2017 வரை காலியாக உள்ள அனைத்து ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர் காலிப் பணியிடங்களையும் நிரப்பிட உடனே ஊழலற்ற முறையில் அனுமதி வழங்கிடு!
13. தமிழகத்தில் உள்ள அனைத்து சுயநிதிக் கல்லூரிகள் / வகுப்புகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு யு.ஜி.சி ஊதிய விகிதங்களை உறுதிப்படுத்திடு!
14. மருத்துவம், கல்வியியல், பொறியியல் உள்ளிட்ட பாடப்பிரிவுகள் போல தமிழகத்தில் சுயநிதிப்பிரிவில் நடத்தப்படும் அனைத்து கலை அறிவியல் பாடப்பிரிவுகளுக்குமான கல்விக்கட்டணத்தை உடனே வரையறை செய்திடுக!
15. கொடைக்கானல் அன்னை தெரசா மற்றும் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகங்களில் பேரவை, ஆட்சிக்குழு போன்ற அமைப்புகளை ஏற்படுத்தி, ஆசிரியர் பிரதிநிதிகள் பங்கேற்பதை உறுதி செய்ய தேவையான சட்டத்திருத்தத்தை அந்தப் பல்கலைக்கழக சட்டங்களில் செய்திடுக! அனைத்து பல்கலைக்கழகங்களிலும் அரசு கல்லூரிகள் மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளுக்கென பிரத்தியேகமான ஆட்சிப்பேரவை உறுப்பினர்கள் உள்ளவாறு பல்கலைக்கழக சட்டத்தில் திருத்தம் கொணர்க!
16. அரசுக் கல்லூரிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் மாற்றுப்பணியில் அனுப்பப்பட்டுள்ள அனைத்து அண்ணாமலைப் பல்கலைக்கழக உபரி ஆசிரியர்களையும் திரும்பப் பெறுக!
17. 01.04.2003-க்கு பின்னர் பணியில் சேர்ந்து பணியில் இருக்கும் / ஓய்வு பெற்ற அனைத்து கல்லூரி ஆசிரியர்களுக்கு (Under NPS) அரசு நிர்ணயித்த பணிக்கொடை (Gratuity) வழங்க வேண்டும்.
18. 10.09.2014 அன்று உயர்கல்வித்துறையுடன் நடந்த பேச்சுவார்த்தையில் ஏற்றுக்கொண்ட முடிவின்படி ஈரோடு சிக்கைய்ய நாயக்கர் கல்லூரியை உடனடியாக அரசுக்கல்லூரியாக அறிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
19. கோவை CBM கல்லூரிக்கு தனி அலுவலர் நியமனம் செய்திட அனுப்பிய நோட்டீசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தடை ஆணையை ரத்து செய்து தனி அலுவலரை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்
20. கரந்தை TUK கல்லூரி, திருச்சி தேசிய கல்லூரி, கடலூர் CKN கல்லூரி, கோவை கொங்கு நாடு கலை அறிவியல் கல்லூரி, சென்னை மீனாட்சி கல்லூரி, உறுமு தனலட்சுமி கல்லூரி, பச்சையப்பன் அறக்கட்டளை கல்லூரிகளில் உள்ள பிரச்னைகளுக்கு தீர்வு காண முத்தரப்பு பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.
21. சென்னை DB ஜெயின் கல்லூரி, திருச்சி தேசிய கல்லூரிகளில் அரசு உதவிபெறும் பாடப்பிரிவுகள் அரசின் அனுமதி பெறாமல் மூடப்பட்டுவருகிறது. இதை உடனடியாக தடுத்து, தொடர்ந்து அரசு உதவிபெறும் பாடப்பிரிவுகளை நடத்திட தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
22. சென்னை ஏ.எம்.ஜெயின் கல்லூரியில் வேதியியல் துறையில் ஆசிரியர் படணியிடங்களை கணக்கிடும் போது விளக்குநர்களின் (Demonstrators) பணிப்பளுவை கணக்கில் எடுக்காமல் கணக்கிடப்பட்டுள்ளது. இதனை சரிசெய்து பணியிடங்களை வழங்கிடவேண்டும்.
23. பணிமேம்பாடுகள் வழங்கும் அதிகாரத்தை கல்லூரி முதல்வர்களுக்கு (தகுந்த விதிமுறை மற்றும் தெளிவுரையுடன்) வழங்கிடுக.
24. 2015 TRB பேராசிரியர்களுக்கு ஒரே மாதிரியான பணிப்பலன், பணப்பயன், முழுத்தகுதி சான்றிதழ் மற்றும் பணிவரன் ஆணை வழங்கிடுக.

25. விருதுநகர் VHNSN கல்லூரி நிர்வாகத்தால் பழிவாங்கப்பட்டுள்ள பேராசிரியர்களின் மேல்முறையீட்டு மனுவின் மேல் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். கல்லூரியின் நிதி நிர்வாக சீர்கேடுகள் மீது சிறப்புத் தணிக்கைக்கு உத்தரவிட வேண்டும்.
26. உதவிபெறும் கல்லூரி முதல்வர்களுக்கு 58 வயதுக்கு மேல் பணி நீட்டிப்பு வழங்கக்கூடாது.
27. மதுரை SN கல்லூரி மீதான சிறப்பு தணிக்கை அறிக்கையின் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்.
28. மதுரை செந்தமிழ் கல்லூரியில் பேராசிரியர்கள் முனைவர் P. ஆறுமுகம் மற்றும் முனைவர் செந்தில்குமார் ஆகியோரின் சட்ட விரோத தற்காலிக பணிநீக்கத்தை உடனடியாக நீக்குவதோடு, அப் பணி நீக்கக் காலத்திற்கான ஊதியத்தை உடனே வழங்கிட வேண்டும்.

*****